களையும் அந்தக் குழுவில் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அதற்கான ஆணை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆக நேற்றைய தினம் என்னிடம் பேசிவிட்டு அதற்கான நடவடிக்கை எடுத்த பிறகும்கூட இன்றைய தினம் வேண்டுமென்றே தி.மு.க. அரசைக் குற்றஞ்சாட்டுவதுபோல ஒரு நீண்ட உரையை இங்கே ஆற்றிக் கொண்டிருப்பது---இந்த அவையிலே தொடந்து 'ஜீரோ அவர்' என்கிற பெயரால் கடைப்பிடிக்கப்படுமானால் அது நல்லதல்ல என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உட்காரலாம். என்னிடத்தில் இசைவு கேட்கிறபோது ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெறுவதற்காக நீங்கள் இசைவு கேட்டீர்கள். முதலமைச்சருடைய ஒப்புதல் பெற்று நாங்களும் அதற்கு இசைவு அளித்தோம். எனவே, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி அவர்களுக்கு விடை அளிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதுதான் முறையே தவிர, நீங்கள் அதிலே ஒரு முழுமையான விளக்கம் அளிப்பது முறையாகாது. இப்போது உங்கள் வினா முடிந்து விட்டது, அதற்கான விளக்கமும் முடிந்து விட்டது. அடுத்து திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

(ஆ) பெண் போலிசார், சீருடை பதவி உயர்வு குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் முன்பு முதல்வராக இருந்த காலத்திலேதான் பெண் போலீசாரை நியமித்தார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் கூட ஒரு சப் இன்ஸ்பெக்டருக்குக் கூட பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு 10 ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்கிறது. இதற்கு உள்ள வித்தியாசம் என்ன? அதோடு பெண் போலீசார் உடுப்பு போடும்போது அவர்களுக்கு சற்றுச் சிரமமாக இருக்கின்றது. டாக்டர்கள்போடுவது போன்று ஒரு புஷ் கோட்டை பெண் போலீசார் மேலாகப் போட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ? அடுத்து பெண் குற்றவாளிகளை பெண் போலீசாரே, பெண் சப்-இன்ஸ்பெக்டர்களே விசாரிக்கக்கூடிய ஒரு தன்மை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

எல்லாம் உருவாகும் நிலைமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, பெண் போலீசாரை டி.எஸ்.பி. வீட்டுக்கு பந்தோபஸ்த்துக்காக அல்லது வேறு எதற்காகவாவது அனுப்புகிறார்களே? அந்த மாதிரி எல்லாம்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டது உடை பற்றி. நீங்கள் பேசுவது காவல் துறை மானியக் கோரிக்கையிலா?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அங்கு ஆர்டர்லியாக அனுப்புவதிலே பெண் போலீசாரை அனுப்பாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப் போல காவல் துறை மானியத்திலே பேச வேண்டிய கருத்துக்களை அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். உடையைப் பொறுத்தவரையில் அது எவ்வாறு திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதை அரசு காவல் துறையோடு கலந்து பேசி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர்டர்லி அனுப்புவதைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி என்னிடத்தில் விவரம் இல்லை. ஒருவேளை பெண் போலீஸ் அதிகாரிகள், பெரிய அதிகாரிகளாக இருந்தால் அவர்களுக்கு ஆர்டர்லி அனுப்பும்போது அந்தப் பெண்கள் அனுப்பப் படலாம். ஆண் போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் அனுப்பப் படத் தேவையில்லை என்ற கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, புஷ் ஷர்ட் என்பது கர்ப்பமுற்ற பெண்களுக்கு மட்டுமே வெள்ளைக்காரர் காலத்தில் போடப்படுவது. ஏனென்றால் அது காலம் ஆக ஆக அதற்குத் தகுந்தவாறு அந்தச் சட்டை விரிந்து கொடுக்கவேண்டும் என்பதற்காக போடப்பட்டது தான் புஷ் ஷர்ட்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is pushing towards......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதையும் எதிர்பார்த்துப் போடலாம். (சிரிப்பு).